மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2022
பயிற்சிப் பரீட்சை - 01

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2022

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல், 2022

1

வினாத்தாள் - I

ஒரு மணித்தியாலம்

சுட்டெண் : .....

- **பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.**
- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ்வற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக**.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம் இலக்கத்தில்	
மொத்தம் எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் **(வகுப்பாசிரியர்)** **புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.**	..... **பெயர்** ..... **ஒப்பம்**
இரண்டாவது பரீட்சகர் **(.....)** **முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.**	..... **பெயர்** ..... **ஒப்பம**
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் **மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.**	..... **பெயர்** ..... **ஒப்பம்**
அதிபர் **மேர்பாற்வை செய்தேன்**	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

LEARN EASY
KNOWLEDGE IS POWER

zoom
வகுப்புக்கள்

Grade 1 - A/L

Medium

TAMIL / ENGLISH

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala

Learn Easy வெளியீடு
புலமைவளரி
இலக்கை நோக்கி


Call: 76667 4945


தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை நடைபெறுகின்றன


www.learneasy.lk || www.lkedu.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER


01) பின்வரும் மூன்று உருக்களில் ஒன்றில் வேறுபாடு உள்ளது. அந்த உருவைத் தெரிவு செய்க.



(1)


(2)


(3)

02) A, B ஆகிய உருக்களிடையே உள்ள வேறுபாடுகளின் எண்ணிக்கை



(A)



(B)


(1) நான்காகும் (2) நான்கைவிடக் கூடியது (3) நான்கைவிடக் குறைந்தது

03) கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.




(1)


(2)



(3)

04) பின்வரும் உருக்களில் இரண்டிற்கு மாத்திரம் பொருத்தமான கூற்று



(1) காற்று (2) நீர் (3) விலங்குகள்


05) அடைப்பினுள் உள்ள உருவை உருவாக்குவதற்குச் சேர்க்க வேண்டிய உருக்கள் இரண்டும் எவை?





(A) **(B)** **(C)** **(D)**

(1) B யும் C யும் (2) A யும் C யும் (3) C யும் D யும்


06) ஊடுகாட்டும் தாளில் வரையப்பட்ட A, B ஆகிய இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.



07) கீழே தரப்பட்டுள்ள உருவை அம்புக்குறி A இலிருந்து பார்க்கும் போது தெரியும் வடிவம் யாது?



08) அகரனிடம் உள்ள பொருட்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.




மேலே உள்ள விபரங்களின் படி மிகச் சரியான கூற்று

(1) அகரனிடம் புத்தகங்கள் அதிகமாக உள்ளன.


(2) அகரனிடம் பென்சில்கள் அதிகமாக உள்ளன.


(3) அகரனிடம் பந்துகள் அதிகமாக உள்ளன.

09)



மேலுள்ள உருக்கோலத்தை குறைந்ததில் இருந்து கூடிய பெறுமானத்திற்கேற்ப ஒழுங்குபடுத்தினால் பொருத்தமான ஒழுங்கைத் தெரிவு செய்க.



10) 

தரப்பட்டுள்ள வடிவத்தை சதுரமாக மாற்றுவதற்கு சேர்க்கப்பட வேண்டிய கட்டங்களின் எண்ணிக்கை யாது?

(1) 6 கட்டங்கள்

(2) 5 கட்டங்கள்


(3) 4 கட்டங்கள்

11) அதிகரித்துச் செல்லும் பிளாத்திக் பொலித்தீன் பாவனையானது மனிதனுக்கும், பிராணிகளுக்கும், சூழலுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இக்கூற்றினால் உணர்த்தப்படுவது

(1) பிளாத்திக், பொலித்தீன் பாவனையின் முக்கியத்துவம்

(2) பிளாத்திக், பொலித்தீன் பாவனையின் நன்மைகள்

(3) பிளாத்திக், பொலித்தீன் பாவனையின் தீமைகள்

12) 

இவ்வுருவில் அவதானிக்கக்கூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

(1) 14


(2) 15

(3) 11

13) 5000 லீற்றர் நீர்த்தொட்டியை நிரப்புவதற்கு ஒரே நேரத்தில் ஒரே அளவான 4 மோட்டர்கள் இயங்கும் போது 30 நிமிடத்தில் நீர்த்தொட்டி நிரம்பியது. அதே தொட்டியை அதில் 3 மோட்டர்கள் மூலம் நீர் நிரப்ப எத்தனை நிமிடங்கள் செலவாகும்.

(1) 120 நிமிடங்கள் (2) 40 நிமிடங்கள் (3) 90 நிமிடங்கள்


14) பின்வரும் கோலத்தை அவதானித்து வெற்றுக்கூண்டில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.




(1) 25

(2) 36


(3) 81

15) 


உருவில் அட்டைத்தாளில் செய்த ஒரு பெட்டி உள்ளது. அது விரிக்கப்படும் போது தோன்றும் உரு யாது?



(1)




(2)




(3)


www.ikedu.lk

16) பின்வரும் உருவில் வெறுமையாக உள்ள பகுதியை நிரப்புவதற்கு பொருத்தமான பகுதிகளைக் கொண்ட விடை யாது?






(1)



(2)



(3)

17) பானுஷன் கூறினான், இன்று 7ம் திகதி திங்கட்கிழமை எனது அக்காவின் பிறந்த தினம் ஆகும். எனது பிறந்த தினம் இம்மாதத்தின் 1ம் திகதி என்ன நாளாக இருந்ததோ அம் மாதத்தின் அதே நாளில் வரும் இறுதி திகதியில் நடைபெறும் எனக் கூறினான். அத்திகதியும், கிழமையும் யாது?

(1) 30ம் திகதி புதன்கிழமை

(2) 29ம் திகதி செவ்வாய்க்கிழமை

(3) 31ம் திகதி வியாழக்கிழமை

18) நீலம், சிவப்பு, ஊதா, மஞ்சள், வெள்ளை என்ற ஒழுங்கில் வர்ண மின்குமிழ்கள் தொடராகப் பொருத்தப்பட்டிருந்த வீதியில் ஊதா நிற மின்குமிழ்களின் எண்ணிக்கை 14 ஆகும். அவ்வீதியில் பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ்களின் எண்ணிக்கை பின்வருவனவற்றுள் யாதாக இருக்கும்?

(1) 67 (2) 75 (3) 69

19) முகம் பார்க்கும் கண்ணாடி ஊடாகப் பார்க்கும் போது மாற்றம் இன்றித் தெரியும் எழுத்துத் தொகுதி

T
O
P

(1)

H
I
V

(2)

H
O
K

(3)

20) $\boxed{20 + 12 + 16} = 48$ கட்டத்திலுள்ள இலக்கங்களுக்குச் சமனாகப் பயன்படுத்தக்கூடிய கட்டத்தைத் தெரிவு செய்க.

(1) $\boxed{4 \times 6 + 24}$ (2) $\boxed{4 \times 6 + 22}$ (3) $\boxed{3 \times 8 + 20}$

21) பின்வரும் பாடலடியை ஒழுங்குபடுத்தும் போது சரியாகக் காட்டும் விடை யாது?

A - திகட்டிடாத நுங்கு

B - சின்னச் சின்ன நுங்கு

C - தின்னத் தின்ன இனிக்கும்

D - செங்கரும்பு நுங்கு


(1) ABDC (2) BDCA (3) BACD

www.lkedu.lk

22) வந்தனாவும் வதனியும் தமது வயது முறையே $25, 26$ எனக் கூறினார்கள். எத்தனை வருடங்களின் பின் அவர்களின் வயதுகளின் கூட்டுத்தொகை 67 ஆகும்.

(1) 8 வருடங்களில் (2) 16 வருடங்களில் (3) 9 வருடங்களில்

23) கீழே தரப்பட்டுள்ள உரு A, உரு B, உரு C ஆகிய மூன்று உருக்களையும் அவதானியுங்கள்.




உரு A **உரு B** **உரு C**

மூன்று உருக்களிலும் இருக்கும் ஏதோவொரு பொதுப் பண்புக்கு ஏற்ப இவற்றில் இரண்டு உருக்களைச் சோடியாக்க முடியும். அந்தச் சோடி

(1) A உம் B உம் (2) A உம் C உம் (3) B உம் C உம்

24) தவளை ஒன்று A என்ற புள்ளியிலிருந்து இரைதேடச் சென்று மீண்டும் அதே இடத்தை வந்தடையும் விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய தவளை தனது இருப்பிடத்திற்கு வந்தடைய எத்தனை தடவை செங்கோணத்தை விட கூடிய கோணத்தில் திரும்பியுள்ளது?



(1) 1 தடவை
(2) 2 தடவை
(3) 3 தடவை

25) $400\,g$ நிலக்கடலை 5 சம பகுதிகளாகப் பொதி செய்யப்பட்டது. அதன் ஒரு பொதியின் நிறைக்கு சமனான அளவில் $4\,kg\ 800\,g$ நிலக்கடலையை எத்தனை பொதிகளாகக் கட்டலாம்?

(1) 60 (2) 40 (3) 50

26) லீலாவிடமிருந்த பணத்தைப் போல் இரண்டு மடங்கு பணம் சீலாவிடமும், சீலாவிடமுள்ளது போன்று மூன்று மடங்கு பணம் மாலாவிடமும் உள்ளது. மூவரிடமும் உள்ள மொத்தப் பணம் ரூபாய் 630.00 எனின் சீலாவிடம் உள்ள பணம் எவ்வளவு?

(1) ரூபாய் 70.00 (2) ரூபாய் 180.00 (3) ரூபாய் 140.00

www.lkedu.lk

27) மரமொன்று முதல் நாள் இருந்ததைப் போன்று அடுத்த நாள் மேலும் 2 மடங்கு உயரம் வளரும். முதலாம் நாள் $3\,m$ உயரமாக காணப்பட்டது. நான்காம் நாள் இறுதியில் மரத்தின் உயரம் யாது?

(1) $18\,m$ (2) $54\,m$ (3) $81\,m$

28) பென்டுலக் கடிகாரம் ஒன்று ஒவ்வொரு 15 நிமிடத்திற்கு ஒரு தடவை ஒரு முறை ஒலிக்கும் அதே நேரம் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் அந்த மணித்தியால எண்ணிக்கையின் அளவில் ஒலிக்கும் எனின், பி. ப. 2.20 இற்கும் பி. ப. 4.35 இற்குமிடையில் எத்தனை தடவை ஒலிக்கும்?

(1) 9 (2) 2 (3) 14

29) தற்போது 4 வயதுடைய தம்பியின் அக்காவிற்கு தம்பியின் வயதின் 3 மடங்கு வயதாகும். தம்பிக்கு 12 வயதாகும் போது அக்காவின் வயது எத்தனை?

(1) 36 (2) 20 (3) 28


30) $18\,m$ நீளமான கம்பியொன்று 6 சமதுண்டுகளாக வெட்டப்பட வேண்டும். ஒரு தடவை வெட்டுவதற்கு ரூபாய் 80.00 செலுத்த வேண்டும் எனின் 6 துண்டுகள் வெட்டுவதற்கு எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்?


(1) ரூபாய் 400.00 (2) ரூபாய் 480.00 (3) ரூபாய் 800.00

31) ஒரு செடியில் 6 கிளைகள் உள்ளன. ஒவ்வொரு கிளையிலும் 5 பூக்கள் உள்ளன. மொத்தமாக 180 பூக்கள் காணப்பட்டன எனின், அங்கு இருந்த செடிகள் எத்தனை?

(1) 7 (2) 5 (3) 6

32) உரு A யில் இருந்து உரு B யின் அளவுடைய எத்தனை வட்டங்கள் வெட்டி எடுக்கலாம்?






(1) 15
(2) 5
(3) 17

33) ஒரு வண்டியில் 3 தாய்மாரும் 3 மகள்மாரும் பயணம் செய்தனர். எனின் வண்டியில ஆகக் குறைந்தது எத்தனை பேர் பயணம் செய்தனர்.

(1) 4 (2) 6 (3) 5

34)



மேலே உள்ள தொடர்பை அவதானித்து குறியீட்டுக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

(1) 7 (2) 10 (3) 32

35) கொப்பி ஒன்றின் விலை ரூபாய் 25 ஆகும். மூன்று கொப்பிகள் வாங்கும் ஒருவருக்கு ஒரு கொப்பி இலவசமாகக் கிடைக்கும். அவர் ரூபாய் 300.00 இற்கு கொப்பிகளை வாங்கினால் எத்தனை கொப்பிகளை அவர் பெற்றுச் சென்றிருப்பார்?

(1) 16 கொப்பிகள் (2) 14 கொப்பிகள் (3) 12 கொப்பிகள்


36) மூன்று பாத்திரங்களில் குறிப்பிட்ட நாணயக் குற்றிகள் இடப்பட்டுள்ளன.



ஒரு பாத்திரத்தில் இருந்து மூன்று நாணயங்களும் இன்னொரு பாத்திரத்தில் இருந்து இரண்டு நாணயங்களும் அடுத்த பாத்திரத்திலிருந்து ஒரு நாணயமும் எடுத்து ஆக்கக்கூடிய மிகக்குறைந்த தொகை யாது?

(1) ரூபாய் 17 (2) ரூபாய் 26 (3) ரூபாய் 42

37) கீழ் உள்ள வரிப்படம் மாணவர் விரும்பும் விளையாட்டுப் பற்றிய விபரத்தைக் குறிக்கின்றது.



மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 32 (2) 64 (3) 80

38) குமார் 29 *லீற்றர்* கொள்ளக்கூடிய தொட்டியில் 5 *லீற்றர்* நீரை ஊற்றுகையில் அவனது தம்பி தொட்டியில் இருந்து 1 *லீற்றர்* நீரை வெளியே எடுப்பான். குமார் எத்தனையாவது தடவையில் நீரை ஊற்றும் போது முதன் முறையாக தொட்டி நிரம்பும்?

(1) 6 வது தடவையில் (2) 8 வது தடவையில் (3) 7 வது தடவையில்

39) 2022 ஆம் ஆண்டுக்கான ஒரு நாட்காட்டி ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு பக்கமுள்ள விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பக்கத்திலும் அதற்குரிய மாதத்தை விட முன்னிருந்த மாதமும் அடுத்துவரும் மாதமும் சிறிய அளவில் அச்சிடப்பட்டிருந்தது. இந்நாட்காட்டியில் எந்த மாதத்திற்குரிய பக்கத்திலுள்ள நாட்களின் மொத்த எண்ணிக்கை குறைவாக இருக்கும்.

(1) ஜனவரி (2) பெப்ரவரி (3) மார்ச்

40) அரைக்கும் ஆலை ஒன்றில் மூன்று இயந்திரங்கள் இயங்கிய நேரம் தரப்பட்டுள்ளது.

மா அரைக்கும் இயந்திரம்	**பி. ப. 3.00**	-	**பி. ப. 3.40**
நெல் குற்றும் இயந்திரம்	**பி. ப. 2.45**	-	**பி. ப. 4.00**
தூள் அரைக்கும் இயந்திரம்	**பி. ப. 3.15**	-	**பி. ப. 4.10**

இம்மூன்று இயந்திரங்களும் சேர்ந்து எத்தனை நிமிடங்கள் இயங்கின?

(1) 85 நிமிடங்கள் (2) 25 நிமிடங்கள் (3) 40 நிமிடங்கள்

www.ikedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2022
பயிற்சிப் பரீட்சை – 1

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

1 மணித்தியாலம் 15 நிமிடம்

1 **வினாத்தாள் - II**

சுட்டெண் : .....

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
- எல்லா வினாக்களுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் ஏற்ப உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற சரியான புள்ளிகளின் எண்ணிக்கை
02	
03	
04	
05	
06	
07	
08	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	பெயரும் ஒப்பமும்
முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
இரண்டாவது பரீட்சகர் (.....) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர்
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	..... பெயர் ..... ஒப்பம்
அதிபர் மேற்பார்வை செய்தேன்	
வலய / மாகாண மேற்பார்வையாளர்	

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

விடியற்காலையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் விறுவிறு எனக் கலப்பையோடு தம் வயல் நோக்கி விரைகின்றனர். வியாபாரிகள் புதிய காய்கறிகளை விற்பதற்காகச் சந்தை நோக்கி வருகின்றனர். புத்துணர்வோடு மாணவர்கள் புதுத் தேடலுடன் பள்ளி செல்கின்றனர். கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண ஆடைகளுடன் வேலையைத் தொடங்க ஊழியர்கள் விரைகின்றனர்.

பந்தியை துணையாகக் கொண்டு விடை எழுதுக.

(i) விடியற் காலையை எதிர்பார்த்திருந்தோர் யாவர்? .....

(ii) பந்தியில் வந்துள்ள அடுக்குத் தொடரினை எழுதுக. .....

(iii) 'கழனி' என்பதன் ஒத்த சொல்லினை எழுதுக. .....

(iv) பந்தியில் உள்ள இரட்டைக்கிளவியை எழுதுக. .....

(v) உயர்திணை, பன்மை நிகழ்கால வினைச்சொல் ஒன்று எழுதுக. .....

(vi) ஊழியர்கள் வேலையைத் தொடங்க எவ்வாறான ஆடைகளுடன் விரைகின்றனர்?

.....

02) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

(i) இரக்கப் போனாலும் ..... போ.

(ii) முற்பகல் செய்யிற் பிற்பகல் .....

03) அ.்.றிணைப் படர்க்கை ஒருமைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.

(1) அதிபர் (2) மேசை (3) மரங்கள்

04) பின்வரும் பிராணிகளுக்குரிய தொனிகளை எழுதுக.

(i) குரங்கு : .....

(ii) ஆந்தை : .....

05) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் "✓" எனவும் பிழையாயின் "✗" எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

(i) மீன்கள் குளத்தில் நீந்தியது. (.....)

(ii) இரவில் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் மின்னின. (.....)

(iii) கிளிகள் பழத்தைக் கொத்தும். (.....)

www.lkedu.lk

06) கீழே தரப்பட்டுள்ள தொடர்மொழிக்குரிய பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

(i) வீண் செலவு செய்பவன்..... (வள்ளல் / ஊதாரி)

(ii) தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவர் ..... (வேட்பாளர் / அமைச்சர்)

07) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்திற்குப் பொருத்தமான இணைமொழியை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

பெண்கள் வயலில் ..... வேலை செய்தனர். (ஆற அமர / ஓடி ஆடி)

08) சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) தொழிலாழி தொளிலாழி தொழிலாளி

(ii) ஆராய்ச்சி ஆராட்சி ஆராச்சி

09) கீழே தரப்பட்டுள்ள பிராணியின் இளமைப் பெயரினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

கீரி : .....

10) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) வேடன் எய்த ..... குறி தவறிச் சென்றது. (பானம் / பாணம்)

(ii) மலை முகட்டில் ..... படர்ந்திருந்தது. (பணி / பனி)


11) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Monkey : .....

(ii) Ship : .....

12) தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i) 

(ii) 

....

13) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) is / father / my / This .....

(ii) book / I / a / am / reading .....

www.lkedu.lk

14) 'தும்ரிய ஸ்தானய' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

.....

15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.
உங்கள் வகுப்பு எது?

.....

16) 'ஐம்பதாயிரத்து ஐந்து' இந்த எண்ணை இலக்கத்தில் எழுதுக.

.....

17) என்னிடம் 475 முத்திரைகள் இருந்தன. தந்தை எனக்கு மேலும் 365 முத்திரைகள் தந்தார். தற்போது என்னிடமுள்ள முத்திரைகளின் மொத்த எண்ணிக்கை யாது?

.....

18) கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்களை எழுதுக.

(i) ....., ..., 25, 28, 31

(ii) ....., 67, 71, 75, ...

19) 24 பென்சில்களில் $\frac{2}{4}$ என்தனை பென்சில்களாகும்?

.....

20) 615 தேய்காய்களைச் சமமாக மூன்று குவியல்களாகப் பிரிக்கும் போது ஒரு குவியலில் உள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

.....

21) தரப்பட்டுள்ள உரோமன் இலக்கத்திற்கு முன்னாலும் பின்னாலும் வரும் உரோமன் இலக்கங்களை எழுதுக.


முந்திய இலக்கம்	உரோமன் இலக்கம்	பிந்திய இலக்கம்
.....	IX	.....

22) கடையிலிருந்து வாங்கி வந்த மின்கம்பிச் சுருளின் நீளம் $40\,m\ 75\,cm$ ஆகும். அதில் $32m\ 80\,cm$ நீளமான மின்கம்பிச் சுருள் வீட்டு மின் தொகுதிக்குப் பயன்படுத்தப்பட்டது. மின்கம்பிச் சுருளின் எஞ்சியுள்ள நீளம் யாது?

.....m .....cm

www.lkedu.lk

23) கீழே தரப்பட்டுள்ள உருவில் $\frac{1}{4}$ ஐ நிழற்றுக.



24) விலைப் பட்டியலைப் பார்த்துச் சிட்டையைப் பூர்த்தி செய்க.

காய்கறி வகை	அளவு	விலை	
		ரூபாய்	சதம்
கரட்	$1\ kg$	90	00
பீட்ரூட்	$1\ kg$	70	00
கோவா	$1\ kg$	100	00
முள்ளங்கி .	$1\ kg$	110	00

காய்கறி வகை		அளவு	விலை	
			ரூபாய்	சதம்
(i)	கரட்	$500\ g$	45	00
(ii)	கோவா	$250\ g$	.....	.....
(iii)	பீட்ரூட்	$500\ g$	.....	.....
(iv)	முள்ளங்கி	$2\ kg$	.....	.....
மொத்தப் பணம்			.....	.....

25) ஒரு மாணவனுக்கு நான்கு விசுக்கோத்துகள் வீதம் ஒரு சுற்றுலாவில் பங்குபற்றும் 94 மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கு எத்தனை விசுக்கோத்துகள் தேவை?

.....

26) அம்மா சந்தைக்குச் சென்று $3\ kg\ \ 75\ g$ நிறையுடைய மரக்கறி வகைகளை வாங்கி வந்தார். அவர் வாங்கிய மரக்கறி வகைகளின் நிறையினை கிராமில் எழுதுக.

..... g

27) 4,3,9 என்னும் எண் அட்டைகளைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க ஆறு எண்களை இறங்கு வரிசையில் ஒழுங்குபடுத்தி வெற்றிடங்களை நிரப்புக.

……. , ……. , 493 , ……. , 394 , …….

28) குறித்தவொரு கடையில் 1 கிலோகிராம் 500 கிராம் சீனியை வாங்குவதற்கு நிவேதா ரூபாய் 500.00 ஐச் செலுத்தியபோது அவளுக்கு மீதியாக ரூபாய் 275.00 ஐக் கடைக்காரர் கொடுத்தார் எனின், அக்கடையில் 1 கிலோகிராம் சீனியின் விலை யாது?

.....

29) 100cm நீளமுள்ள ஒரு அளவை நாடாவின் நடுவில் 10cm நீளமுள்ள பகுதி சேதமடைந்துள்ளது. அப்பகுதியை அகற்றி மீதி இரு துண்டுகளும் 5cm வீதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன. தற்போது அளவை நாடாவின் நீளம் யாது?

..... cm

www.ikedu.lk

30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30) பின்வருவனவற்றுள் பொது இடம் அல்லாதது எது?
(1) வங்கி (2) வீடு (3) பெருந்தெரு

31) சூரியநமஸ்காரத்தில் ஒரேமாதிரியாகச் செய்யப்படும் படிமுறைகள் எவை?
(1) 1 ஆம் படிமுறை 12 ஆம் படிமுறை
(2) 2 ஆம் படிமுறை 10 ஆம் படிமுறை
(3) 3 ஆம் படிமுறை 10 ஆம் படிமுறை

32) 'எனது உள்ளத்தை என்னால் அமைதிப்படுத்த முடியும்! என்ற எண்ணம் தோன்றும் படிமுறை எது?
(1) திடசித்தம் (2) உதிப்பு (3) மலர்வு

33) அரச இலச்சினையில் உள்ள நிறைகுடம் எதனைக் குறித்து நிற்கிறது?
(1) நிலைத்திருப்பு (2) தார்மீகம் (3) சௌபாக்கியம்

34) மீலாத் விழாவுடன் தொடர்புடைய சமயத்தவர்கள் யாவர்?
(1) இஸ்லாமியர்கள் (2) பௌத்தர்கள் (3) கிறிஸ்தவர்கள்

35) இலங்கை பிரித்தானியர்களால் முழுமையாகக் கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
(1) 1796 (2) 1815 (3) 1875

36) வேப்பம் பூ பூக்கும் மாதம் எது?
(1) ஆடி (2) ஐப்பசி (3) சித்திரை

37) பிராணிகளால் தாவரங்களுக்குக் கிடைக்கும் நன்மையாக அமைவது எது?
(1) நிழல் கிடைத்தல்
(2) வித்துக்களைப் பரப்ப உதவுதல்
(3) பாதுகாப்பு கிடைத்தல்

38) ஒளடதத்திற்குப் பயன்படுத்தாத இலை பின்வருவனவற்றுள் எது?
(1) வெண்டியிலை (2) கறிவேப்பிலை (3) சாத்தாவாரி

39) பின்வருவனவற்றுள் அதிக கால்கள் உள்ள உயிரினம்
(1) சிலந்தி (2) மரவட்டை (3) நண்டு


40) வண்ணத்துப்பூச்சியின் முட்டைகளைக் காணக்கூடிய தாவரத்தின் பகுதி
(1) இலையின் மேற்புறம் (2) இலையின் கீழ்ப்புறம் (3) பூவின் மேற்புறம்

41) 2010 ஆம் ஆண்டிலிருந்து உலக சிட்டுக்குருவிகள் நினைவுகூரப்படும் தினம் எது?
(1) மார்ச் - 20 (2) ஏப்ரல் - 17 (3) டிசம்பர் - 15

42) "ஈவ்னிங் ஸ்டார்" என அழைக்கப்படும் கோள் எது?

(1) சனி (2) வெள்ளி (3) பூமி

43) படத்தில் காட்டப்பட்டுள்ள உபகரணத்தைப் பயன்படுத்துபவர் யாவர்?




(1) மேசன்


(2) விவசாயி

(3) மரவேலை செய்பவர்

44) வீட்டில் நாம் பொதுவாகப் பயன்படுத்தும் உபகரணம் அல்லாதது எது?

(1) 

(2) 

(3) 

45) மணலினுள் புதைப்பதன் மூலம் பேணிப் பாதுகாப்படும் உணவு

(1) அப்பிள் (2) பாகற்காய் (3) எலுமிச்சம்பழம்

46) தலைக்கவசம், கையுறை, காற்காப்பு என்பன அணிந்து விளையாடும் விளையாட்டு எது?

(1) காற்பந்தாட்டம் (2) கரப்பந்தாட்டம் (3) கிரிக்கெற்

47) நீராவியைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் உணவு அல்லாதது

(1) பிட்டு (2) தோசை (3) இடியப்பம்

48) அசுத்தமான உணவு, நீர் உட்கொள்வதால் பரவும் நோய்கள்

(1) கொலரா, சீதபேதி

(2) வாந்திபேதி, சின்னமுத்து

(3) கழிச்சல் கொப்பளிப்பான்

49) பேருந்தில் ஆசனம் ஒதுக்கப்படாதோர்

(1) அங்கவீனர்கள் (2) சிறுவர்கள் (3) கர்ப்பிணித் தாய்மார்கள்

50) நன்கு சூடாக்கப்பட்ட உலோகக் கரண்டி மீது நீர்த்துளியொன்றை இடும்போது நிகழாதது எது?

(1) ஒலி எழும் (2) நீர் ஆவியாகும் (3) நீர் குளிர்ச்சியடையும்

51) இலங்கையில் உள்ள பின்வரும் மாகாணங்களில் கரையோர மாகாணம் எது?

(1) மத்திய மாகாணம் (2) ஊவா மாகாணம் (3) கிழக்கு மாகாணம்

52) இலங்கையிலே 'தாமரைக் கோபுரம்' அமைந்துள்ள நகரம்

(1) கொழும்பு (2) அம்பாந்தோட்டை (3) கண்டி

www.lkedu.lk

53) பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் அல்லாதது
(1) பட்டாசு கொளுத்துதல்
(2) பாதையில் வலது புறத்தின் வழியே நடந்து செல்லல்
(3) புகையிரதத் தண்டவாளத்தின் வழியே நடந்து செல்லல்


54) தேய்வுற்றிருந்த நிலையில் எண்ணெய் இட்டு பயன்படுத்தக் கூடியது
(1) மேசை (2) திரைச்சீலை (3) கப்பி

55) பாதுகாப்பிற்காக ஓட்டினுள் ஒளிந்து கொள்ளும் திறன் கொண்ட பிராணி
(1) நத்தை (2) எலி (3) அணில்

56) பின்வரும் இலைகளுள் ஒத்த வடிவ இலை அல்லாதது
(1) அகத்தி (2) தொட்டாற்சுருங்கி (3) வெண்டி

57) பச்ச வளையல் தொட்டு ஏலேலோ .....
என்பது எவ்வகைப் பாடலாகும்?
(1) சேனைப்பாடல்
(2) அரிவு வெட்டுப் பாடல்
(3) மீனவர் பாடல்

58) ஆதிகாலத்தில் நீரைச் சுத்தஞ் செய்த முறை
(1) குளோரீன் இடுதல்
(2) வடிகட்டியைப் பயன்படுத்துதல்
(3) கரியை நீரில் இடுதல்

59)  படத்தில் காட்டப்பட்டுள்ள வடிவமுடைய திருகாணியைக் கழற்றுவதற்கு மிகப் பொருத்தமான உபகரணம்
(1) சுத்தியல் (2) பூமுனைத் திருப்புளி (3) பொதுவான திருப்புளி

60) "வீட்டுத்தோட்டம் செய்வதால் கிடைக்கும் நன்மைகள்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்).

(i) .....
.....

(ii) .....
.....

(iii) .....
.....

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

பயிற்சிப் பரீட்சை 1 (23.06.2022)

தரம் 5 **புள்ளித்திட்டம்**

1

வினாத்தாள் I (விடைகள்)

01)	2	11)	3	21)	2	31)	3
02)	3	12)	1	22)	1	32)	1
03)	1	13)	2	23)	3	33)	1
04)	1	14)	3	24)	2	34)	3
05)	2	15)	1	25)	1	35)	1
06)	2	16)	3	26)	3	36)	2
07)	1	17)	2	27)	3	37)	2
08)	3	18)	3	28)	3	38)	3
09)	1,2	19)	2	29)	2	39)	3
10)	1	20)	1	30)	1	40)	2

வினாத்தாள் II (விடைகள்)

வினா இல		விடைகள்	புள்ளிகள்
01)	(i)	விவசாயிகள்	01 புள்ளி
	(ii)	வண்ண வண்ண	01 புள்ளி
	(iii)	வயல்	01 புள்ளி
	(iv)	விறு விறு	01 புள்ளி
	(v)	விரைகின்றனர் / வருகின்றனர் / செல்கின்றனர்	01 புள்ளி
	(vi)	கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண ஆடைகளுடன்	01 புள்ளி
02)	(i)	சிறக்கப்	01 புள்ளி
	(ii)	விளையும்	01 புள்ளி
03)		மேசை	01 புள்ளி
04)	(i)	அலப்பும்	01 புள்ளி
	(ii)	அலறும்	01 புள்ளி
05)	(i)	x	01 புள்ளி
	(ii)	✓	01 புள்ளி
	(iii)	✓	01 புள்ளி
06)	(i)	ஊதாரி	01 புள்ளி
	(ii)	வேட்பாளர்	01 புள்ளி
07)		ஓடி ஆடி	01 புள்ளி
08)	(i)	தொழிலாளி	01 புள்ளி
	(ii)	ஆராய்ச்சி	01 புள்ளி

www.ikedu.lk

09)		பிள்ளை	01 புள்ளி
10)	(i)	பாணம்	01 புள்ளி
	(ii)	பனி	01 புள்ளி
11)	(i)	குரங்கு	01 புள்ளி
	(ii)	கப்பல்	01 புள்ளி
12)	(i)	Knife	01 புள்ளி
	(ii)	Carrot	01 புள்ளி
13)	(i)	This is my father	01 புள்ளி
	(ii)	I am reading a book	01 புள்ளி
14)	புகையிரத நிலையம்		01 புள்ளி
15)	ஒபே பந்திய குமக்த?		01 புள்ளி
16)	50 005		02 புள்ளிகள்
17)	840		02 புள்ளிகள்
18)	(i)	19 , 22	02 புள்ளிகள்
	(ii)	63, 79	02 புள்ளிகள்
19)	12		02 புள்ளிகள்
20)	205		02 புள்ளிகள்
21)	viii , x		02 புள்ளிகள்
22)	7 , 95		02 புள்ளிகள்
23)	ஏதாவது இரண்டு கட்டங்கள் நிழற்றுதல்		02 புள்ளிகள்
24)	25 00 35 00 220 00 325 00		04 புள்ளிகள்
25)	376		02 புள்ளிகள்
26)	3075		02 புள்ளிகள்
27)	943, 934, **493**, 439, **394**, 349		02 புள்ளிகள்
28)	ரூபாய் 150.00		02 புள்ளிகள்
29)	85		02 புள்ளிகள்

30)	**2**	36)	**3**	42)	**2**	48)	**1**	54)	**3**
31)	**3**	37)	**2**	43)	**1**	49)	**2**	55)	**1**
32)	**1**	38)	**1**	44)	**2**	50)	**3**	56)	**3**
33)	**3**	39)	**2**	45)	**3**	51)	**3**	57)	**2**
34)	**1**	40)	**2**	46)	**3**	52)	**1**	58)	**3**
35)	**2**	41)	**1**	47)	**2**	53)	**2**	59)	**2**

(30 புள்ளிகள்)

60) பொருத்தமான வாக்கியங்கள் (6 புள்ளிகள்)

- முழு விடைத்தாளையும் கருத்தில் கொண்டு உறுப்பமையவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருப்பின் 2 புள்ளிகள் வழங்குக.

www.lkedu.lk